## வருவாய்த்துறை - தேனி மாவட்டம்
## உத்தமபாளையம் வட்டம்

**அறிவிக்கை எண். 01/2022** **நாள்: .02.2022.**

**விளம்பர எண். 01/UPM**

2020-2021 மற்றும் 2021-2022ம் ஆண்டிற்கான கிராம உதவியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களில் தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்தில் காலியாக உள்ள 08 (எட்டு) பணியிடங்களில் இனச்சுழற்சி முறையின் அடிப்படையில் நேரடி நியமனம் செய்வதற்கான எழுத்துத்தேர்விற்கு 18.03.2022 அன்று வரை மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்றமுறை |
|---|---|---|
| கிராம உதவியாளர் | 08 | ரூ.11,100 - 35,100 |

**1. காலிப்பணியிடங்கள் : 08**

| வ.எண் | இனச் சுழற்சி எண். | இனம் | பொது / பெண் | முன்னுரிமையுள்ளோர் / முன்னுரிமையற்றோர் | காலியிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 07 | மிகவும் பிற்பட்ட வகுப்பு / சீர்மரபினர் | பெண் (DW) | முன்னுரிமையற்றோர் | 1 |
| 02 | 08 | பிற்பட்ட வகுப்பு (பிற்பட்ட முஸ்லீம் தவிர) | பெண் (DW) | முன்னுரிமையற்றோர் | 1 |
| 03 | 09 | பொதுப்பிரிவினர் | பொது | முன்னுரிமையற்றோர் | 1 |
| 04 | 10 | பிற்பட்ட வகுப்பு (பிற்பட்ட முஸ்லீம் தவிர) | பொது | முன்னுரிமையற்றோர் | 1 |
| 05 | 11 | பொதுப்பிரிவினர் | பொது | முன்னுரிமையற்றோர் | 1 |
| 06 | 12 | பட்டியல் வகுப்பினர் | பெண் (DW) | முன்னுரிமையற்றோர் | 1 |
| 07 | 13 | மிகவும் பிற்பட்ட வகுப்பு / சீர்மரபினர் | பொது | முன்னுரிமையற்றோர் | 1 |
| 08 | 14 | பிற்பட்ட வகுப்பு (பிற்பட்ட முஸ்லீம் தவிர) | பொது | முன்னுரிமையற்றோர் | 1 |
| | | | | **மொத்த காலியிடங்கள்** | **8** |

## 2. முக்கியத்தேதிகள்

| | | | |
|---|---|---|---|
| அ. | அறிவிக்கை நாள் | : | 01.03.2022 |
| ஆ. | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடை நாள் | : | 18.03.2022 |
| இ. | எழுத்துத்தேர்வு நடைபெறும் நாள் | : | தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் அஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். |

## 3. தகுதிகள்

(அ) வயது (01.07.2021 அன்று):-

| வ.எ | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்து இருக்கவேண்டும்) | அதிகபட்ச வயது (முடிவடைந்து இருக்கக்கூடாது) |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்) பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 21 வயது | 37 வயது |
| 2. | ஏனையோர் (ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்) பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய வகுப்பினை சாராதவர்கள். | 21 வயது | 34 வயது |
| 3. | இதர வகுப்பினர் | 21 வயது | 32 வயது |

### வயது வரம்புச்சலுகை

### 1. முன்னாள் இராணுவத்தினர்

தெரிவு நடத்தப்படும் ஆண்டின் ஜுலை முதல் நாள் அன்று 53 வயதிற்கு குறைந்த ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகியோர் 48 வயதிற்கு குறைந்த ”ஏனையோர்”

**2. மாற்றுத்திறனாளிகள்**

நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் 10 ஆண்டு வரை வயது வரம்புச்சலுகை பெற தகுதியுடையவராவார்கள்.

(ஆ) கல்வித்தகுதி (01.07.2022 அன்று உள்ளபடி)

01.07.2022 -ம் அன்று விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. குறைந்தபட்ட கல்வித்தகுதி : 5-ம் வகுப்பு தேர்ச்சி

**பொது விபரங்கள்:**

I. கிராம உதவியாளர் பதவிக்கு நியமன இட ஒதுக்கீட்டு விதி வட்ட வாரியாகப் பின்பற்றப்படும். வட்ட வாரியான காலிப்பணியிட பகிர்வு நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்னர் அறிவிக்கப்படும்.

II. அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு நடைபெறுவதற்கு முன்பு வரை காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்கு உட்பட்டதாகும்.

III. பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு தகுதிவாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்கள் அதே வகுப்பைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

IV. ஆதரவற்ற விதவைகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்களுக்கான நியமன இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்குப் பொருந்தும்.

V. மாற்றுத்திறனாளிகளின் மாற்றுத்திறன் சதவீதம் 40 % முதல் 50 %-க்குள் உடையவராக இருக்கவேண்டும். பார்வையற்ற மற்றும் காதுகேளாத நபர்கள் இத்தெரிவிற்கு தகுதியற்றவர்களாவர்.

VI. உடற்தகுதிச்சான்றிதழ்:

இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள உடற்தகுதியினைப் பெற்றிருக்கவேண்டும்.

| | |
|---|---|
| உடற்தகுதி சான்றிதழ் படிவம்<br><br>தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சிறப்ப விதியின் கீழ் | நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம்<br>பார்வை தரம் - III<br>அல்லது<br>அதற்கு மேம்பட்ட தரம். |

## 5. பிற தகுதிகள்

### நியமனத்திற்கு முன் இருப்பிடம்

இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் அந்த வட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும். நிரந்தர முககவரிக்கு ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை / ஆதார் அட்டை / குடும்ப அட்டை / ஓட்டுநர் உரிமம் ஆகியவற்கை சமர்ப்பிக்கவேண்டும். மனுதாரரின் நிரந்தர முகவரி தொடர்பாக எழும் தெளிவின்மைகள் எழும் தெளிவின்மைகள் குறித்து பணி நியமன அலுவலரின் முடிவே இறுதியானது.

### நியமனத்திற்குப் பின் இருப்பிடம்.

இப்பதவியில் பணியமர்த்தப்படும் ஒவ்வொருவரும், பதவிப் பொறுப்பிலிருக்கும் கிராமத்தில் அவர் அப்பதவிப் பொறுப்பிலிருக்கம் காலம் வரை தொடர்ந்து வசிக்கவேண்டும்.

I. ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்கள்) முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும் அவ்வகுப்பினர்களில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர் இருப்பின் அவ்விண்ணப்ப்தாரார்கள் ஆதிதிராவிடர் வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டிற்குள் மதிப்பெண் தரவரிசைப்படி நிரப்பப்படுவர். ஆதிதிராவிர் வகுப்பினர் அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில், அப்பணியிடங்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த, அதாவது ஆதிதிராவிடர் அருந்ததியர் வகுப்பினர் அல்லாதோரைக் கொண்டு நிரப்பப்படும்.

II. தெரிவு குறித்து பெறப்படும் எந்த ஒரு விபரமும் (விண்ணப்பதாரர் நிலை / விண்ணப்பக் கடிதத்தில் கோரி உரிமை தவிர) தெரிவிற்கு முன் மூலச் சான்றிதழ்கள் கோரப்படும் போது அனுப்பப்படவேண்டும். பின்பு பெறப்படும் தெரிவு குறித்த எந்த ஒரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது.

III. கைது செய்யப்பட்டிருத்தல், குற்றத்தீர்ப்ப வழங்கப்பட்டிருத்தல், வேலைக்கு ஆட்கள் தெரிவு செய்யும் ஏதேனும் ஒரு முகமையினால் தடை / தகுதியின்மை செய்யப்பட்டிருத்தல், குற்றம் அல்லது ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருத்தல் / முடிவுற்றிருத்தல், கிளர்ச்சி அல்லது ஏதேனும் அரசியல் அமைப்பில் பங்கேற்பு பாராளுமன்ற / சட்ட மன்ற / உள்ளாட்சி தேர்தல்களில் பங்கேற்றல் குறித்த சரியான மற்றும் உண்மையான தகவல்களை விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் தெரிவிக்கவேண்டும். அதாவது குற்ற வழக்கு தீர்ப்பு, துறை ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்ட அரசாணை/செயல்முறை ஆணை அல்லது விண்ணப்பதாரர் அரசுப் பணியில் பணியமர்த்தப்படுவதற்கான தகுதி குறித்த ஆவணங்களை சான்றிதழ் சரிபார்ப்பு சமயத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

IV. இட ஒதுக்கீட்டு வகை, வயது மற்றும் கல்வித்தகுதி மற்றும் இதர அடிப்படைத் தகுதிகள் ஆகியவை குறித்த விண்ணப்பதாரரின் விபரங்கள் தவறு எனத் தெரியவந்தால் அத்தகைய விண்ணப்பம் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படும்.

## 6. எழுத்துத்தேர்விற்கான பாடத்திட்டம் (கொள்குறிவகை)

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்கு தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| பின்வரும் பாடங்களில் ஒற்றைத் தேர்வுத்தாள் (5-ம் வகுப்பு தரம்) பொது அறிவு (20 வினாக்கள்) கிராம நிருவாக நடைமுறைகள் (20 வினாக்கள்) மொத்தம் (40 வினாக்கள்) | 1 மணி நேரம் | 40 | 16 (அனைத்து வகுப்பினருக்கும்) |
| **மொத்தம்** | | **40** | **16** |

## 7. தேர்வு மையங்கள்:

தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத்தேர்விற்கான தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு (Hall Ticket) பின்னர் தனியே நேரில் வழங்கப்படும்.

குறிப்பு

- விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதுவதற்கும் சான்றிதழ் சரிபார்த்தலுக்கும் தங்களது சொந்த செலவில் வரவேண்டும்.
- தேர்வு மையங்களை மாற்றக்கோரும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## 8. தெரிவு செய்யும் நடைமுறை

விண்ணப்பதாரர்ககள் எழுத்துத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் நியமன இட ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி தெரிவு செய்யப்படும்.

## 9. தடையின்மைச் சான்று

அரசுப் பணியாளர்கள் தங்களது துறையிலிருந்து தடையின்மைச் சான்று பெற்று சான்றிதழ் சரிபார்ப்பின்போது சமர்ப்பிக்கவேண்டும்.

## 10. ஏனைய முக்கிய அறிவுரைகள்

(அ) விண்ணப்பதாரர்கள் தேர்விற்கான தங்களுக்கு தகுதிகளை உறுதி செய்தல்

i. தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், தாங்கள் அத்தேர்விற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளனரா என உறுதி செய்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு நிலையிலான அனுமதியும் அவர்களின் எல்லா தகுதிகளும் சரியானது என்று கருதப்படும் வரை தற்காலிகமானது. தேர்விற்கான அனுமதிச்சீட்டு வழங்குவதால் மட்டு அவர்களின் விண்ணப்பதாரர் நிலை இவ்வலுவலகத்தால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது எனக் கருத இயலாது.

II. விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு தபால் மூலமாகவோ, நேரிலோ அனுப்பலாம். ஒன்றுக்கு மேற்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

III. சமீபத்தில் எடுக்ககப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு புகைப்படத்தின் மேல் பகுதியில் சுய சான்றொப்பத்துடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

IV. அனைத்து சான்றாவணங்களின் நகல்கள் மட்டுமே உரிய முறையில் சுய சான்றறொப்பம் செய்து விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு அனுப்பப்படவெண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கக்கூடாது.

(ஆ) கைப்பேசி மற்றும் ஏனைய பொருட்களுக்கும் தடை

I. விண்ணப்பதாரர்கள் கைபேசி, கணிப்பான, ஞாபகக் கருவிகள், புத்தகங்கள், மின்னனுகருவிகள், பதிவுக் கருவிகள் ஆகியவற்றை தனியாகவோ விண்ணப்பதாரரின் மோதிரம் அல்லது கைக்கடிாரத்தின் இணைப்பாகவோ தேர்வு நாளன்று தேர்வுக்கூடத்திற்கு கொண்டு வரக்கூடாது.

II. அவ்வாறான பொருட்களை வைத்திருப்போர் காணப்பட்டால் அவர்கள் தொடர்ந்து தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் அவர்களது விடைத்தாள்கள் செல்லாததாக்கப்படுவதுடன் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கியும் வைக்கப்படுவர். தேவைப்படின் அவ்விடத்திலேயே முழுச் சோதனைக்கும் உட்படுத்தப்படுவர்.

III. தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்பட்ட எழுது பொருட்களான பேனா தவிர (வண்ண எழுதுகோல் அல்லது பென்சிலாக அல்லாமல்) புத்தகங்கள், குறிப்புகள், தனித்தாள்கள், கணிதம் மற்றும் வரைபடக் கருவிகள், பாடப்புத்தங்கள், பொதுக்குறிப்புத்தாள்கள் ஆகியவற்றைக் கொண்டு வரக்கூடாது.

**விண்ணப்பிக்க கடைசி நாள்:**

விண்ணப்பங்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பப்படவேண்டும். 18.03.2022 அன்று மாலை 5.45 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் அஞ்சல் உறை மீது "கிராம உதவியாளர் பணிக்கான நேரடித்தேர்வு - மார்ச் 2022" என தெளிவாகக் குறிப்பிடவேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 18.03.2022 தேதிக்கு முன்பாக வட்டாட்சியர், வட்டாட்சீயர் அலுவலகம், உத்தமபாளையம் என்ற முகவரிக்கு அஞ்சல் மூலமாக அனுப்பப்படவேண்டும். காலதாமதமாக வரப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இடம் : உத்தமபாளையம்
நாள் : .02.2022.

வட்டாட்சியர்
உத்தமபாளையம்

25.02.2022

**ANNEXURE**

**NOTIFICATION FORM TO BE USED WHEN CALLING FOR APPLICATIONS FROM EMPLOYMENT EXCHANCE FOR RECRUITMENT TO STATE GOVERNMENT / STATE QUASI / LOCAL BODY VACANCIES**

| | | | |
|---|---|---|---|
| 1 | (a) | Name of the Office / Department Address & Phone Number | Reveune Department, Taluk Office, U.Ammapatty Road, Uthamapalayam. |
| | (b) | Sector to which the employer belongs (Tick-whichever is applicable) | STATE GOVERNMENT/STATE QUASI/ LOCAL BODY |
| 2 | | Name and Designation of the Indenting Officer with Telephone Number | Tahsildar,<br>Uthamapalayam.<br>Ph.No. 9445000596 |
| 3 | | Date and place of interview | Will be intimated directly to the candidate from the office |
| 4 | (a) | Designation of the Posts | Village Assistant |
| | (b) | Scale of Pay | 11,100-35,100/- |
| | (c) | Place of work | Uthamapalayam Taluk |
| | (d) | Total Number of posts | 8 (Female-3, General-5) |

**DETAILS OF RESERVATION FOR VARIOUS COMMUNITIES/CATEGOREIES AS PER RULE 22 OF THE TAMILNADU STATE AND SUBORDINATE SEVICES RULES AND OTHER RELEVANT GOVENMNET ORDERS.VIZ.,**

| | | |
|---|---|---|
| 1 | G.O.Ms.No.983, Personnel and Administrative Reforms (Personnel-P) Department dated:7.10.1986 & G.O.Ms.No.99 Personnel and Administrative reforms (Personnel-P) Department dated: 26.02.1988. | Reservation for Differently Abled. |
| 2. | G.O.Ms.No.616, Personnel and Administrative reforms (Personnel-R) Department Dated:06.7.1987. | Reservation for Ex-serviceman |
| 3. | G.O.Ms.No.89, Personnel_R) Department Dated:17.02.1989. | Reservation for women |
| 4 | GO.Ms.No.242,BCW, NMP & SW Department Dated:28.3.1989. | Reservation for Backward class/Most Backward Classes/Denotified communities |
| 5. | G.O.Ms.No.541, Personnel & Administrative Reforms (Personnel-R) Department Dated:29.9.1989 | Reservation for Priority and Non Priority |
| 6. | G.O.Ms.No.1090, Adhidravidar & Tribal Welfare Department Dated:22.06.1990. | For Scheduled Castes and Scheduled Tribes. |
| 7. | G.O.Ms.No.142 Personnel and Administrative reportms department Dated:29.10.2009 | 200 Point Communal Roster. |
| 8. | G.O.Ms.No,241 Personnel and Administrative reforms Department Dated:29.10.2007. | Reservation for Backward class (Muslims) |
| 9. | G.O.Ms.No.50, Adi Dravidar and Tribal Welfare Departmnet dated:20.04.2009. | Reservation for Scheduled Castes (Arunthathiyars) |
| 10. | G.O.Ms.No.145, Personnel and Administrative Reforms (K) Department dated:30.09.2010. | Reservation for Tamil Medium. |
| 11. | G.O.Ms.No91, Human Resource Management(S) Department dated:13.09.2021 | Age Relaxation for 2 Years in All Catergories |
| 12. | G.O.Ms.No75, Human Resource Management(K) Department dated:26.07.2021 | Special Reservations provided for MBC (Vanniyakulasathriyar) |

6. Duration of Vacancies.

| Regular | Temporary | Part time | Appretice |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 8 | - | - | - |

7.GUALIFICATIONS REQUIRED:

(COPY OF THE SERVICE RULES IN RESPECT OF QUALIFICATION, EQUIVALENT QUALIFICATIONS, AGE LIMIT AND AGE RELAXATION TO BE FURNISHED)

| | | |
|---|---|---|
| a) | ESSENTAL: i) Academic<br>ii) Technical | 5 th Std Pass |
| b) | Experience | --- |
| c) | Whether there is any relaxation in qualification available for certain categories of applicants. | --- |

8. AGE LIMIT:

| i) | Age limit | | SC | SCA | ST | MBC | BC | OC | Differently abled person |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Maximum | 37 | 37 | 37 | 34 | 34 | 32 | 32+10 |
| | | | | | | | | | |
| | | Minimum | 21 | 21 | 21 | 21 | 21 | 21 | --- |
| ii) | Crucial date of reckoning the age limit | | 01.07.2022 | | | | | | |

Note: Maximum Age limit 10 years relaxed to Differently abled persons as per G.O.Ms.No,704 Public (Service A) Department, Dated 10.4.1964.

| | | | |
|---|---|---|---|
| 9 | Whether rule 12(d) of the General Rules for the Tamil Nadu State and Subordinate Service will be applicable to the vacancy/vacancies notified in this proforma (vide Government letter No.48882/96-3 L & E Department dated 3.3.1998 (N2). | : | NO |
| 10 | Whether Differently Abled candidates are eligible, If not a copy of relevant G.O. may be enclosed. | : | YES |
| 11 | Any other information considered relevant | : | NIL |

1. Certified that while placing the demand, instruction of the Government have been fully complied with by duty examining the roster maintained for communal rotation and reservation for priority and Non-priority categories.

2. Certified that while placing this demand, qualifications and conditions other than those prescribed for the post in the special rules have not been insisted upon.

3. Certified that all applications for appointment on compassionate ground have been taken into account and no eligible cases are pending for appointments on compassionate ground as on date of sending this vacancy notification.

4. Certified that suitable candidates have been considered from/are not available in the list of retrenched personnel maintained by the authorities concerned/officer in charge of the closed units belonging to Government/ quasi Government / Local Body etc., and that the Government Orders/ Instructions issued in this regard have been strictly adhered to.

5. Certified that 3% reservation for Differently Abled is fulfilled if number of vacancy is 33 and more.

6. Certified that result of selection of previous notification have been sent to the respective employment offices.

25/2/2021

**SIGNATURE OF THE INDENTING OFFICER.**

## வருவாய்த்துறை - தேனி மாவட்டம்
## உத்தமபாளையம் வட்டம்
## கிராம உதவியாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பப்படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தந்தை / கணவர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி | : | |
| 4. | கல்வித்தகுதி (கல்விச்சான்றின்நகல்கள் இணைக்கப்படவேண்டும்) | : | |
| 5. | இனப்பிரிவு (உரியவற்றை தேர்ந்தெடுக்கவும்) | : | |
| 6. | சாதி (உட்பிரிவுடன்) | : | |
| 7. | மதம் | : | |
| 8. | பிறந்த ஊர்<br>வட்டம்<br>மாவட்டம் | :<br>:<br>: | |
| 9. | நிரந்தரமுகவரி | : | |
| 10. | முன்னுரிமை கோருகிறீரா? (ஆம் எனில் உரியவற்றை தேர்ந்தெடுக்கவும் உரிய சான்றிதழின் நகல் இணைக்கப்படவேண்டும்) | : | |
| | 1. ஆதரவற்ற விதவை | : | |
| | 2. மாற்றுத்திறனாளி | : | |
| | 3. முன்னாள் இராணுவ படைவீரர் / படைவீரரைச் சார்ந்தோர் | : | |
| | 4. கலப்புத்திருமணம் செய்துகொண்டவர் | : | |
| | 5. இதரம் | : | |
| 11. | வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவெண் இருப்பின் அவ்விபரம் | : | |
| 12. | குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளீர்களா? (பொருத்தமானவற்றை குறிப்பிடவும்) | : | ஆம் / இல்லை |
| 13. | அரசியல் / கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளீர்களா? (பொருத்தமானவற்றை குறிப்பிடவும்) | : | ஆம் / இல்லை. |

இடம்:

நாள்:

விண்ணப்பதாரரின் கையொப்பம

இணைப்பு: 1. கல்வி சான்று நகல், 2. இருப்பிடச்சான்று நகல் (ம) ஆதார் அடையாள அட்டை / வாக்காளர் அடையாள அட்டை நகல், 3. சாதிச்சான்று நகல், 4. முன்னுரிமை கோருபவராயின் அதற்கான சான்று நகல்